## தேசிய வருவாய்வழி திறனறித்தேர்வு (NMMS)

### மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள பயிற்சி வகுப்பு காணொலிகள் விபரம்

திரு.ப.மணிகண்டன் ஆகிய நான் 05.12.2006 அன்று இடைநிலை ஆசிரியராக முதன்முதலில் பணியேற்று, 29.06.2012 இல் கணித பட்டதாரி ஆசிரியராக பதவி உயர்வு பெற்று சுமார் 18 ஆண்டுகள் கொல்லிமலை ஒன்றியத்தில் பணிபுரிந்து வந்தேன். தற்போது பொதுமாறுதலில் விருப்ப மாறுதல் பெற்று இராசிபுரம் ஒன்றியம், பூசாரிபாளையம் ஊ.ஒ.ந.நி.பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன்.

கொரோனா காலத்தில், மாணவர்களுக்கு பாடம் கற்பிக்க காணொலிகள் தயாரிக்க ஆரம்பித்து, தற்போது 6 முதல் 10ஆம் வகுப்பு கணக்கு பாடங்களின் காணொலிகள் மற்றும் NMMS, TRUST, NTSE, TNCMTSE ஆகிய திறனறித் தேர்வுகளுக்கு மாணவர்கள் தயாராகும் வண்ணம் சுமார் 1800 காணொலிகள் தயாரித்துள்ளேன்.

அரசுப்பள்ளிகளில் பயின்று வரும் எட்டாம் வகுப்பு மாணவர்கள் எழுதக்கூடிய NMMS தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு மாதம் ரூ.1000/- வீதம் நான்கு வருடங்களுக்கு ரூ.48,000/- ஐ ஊக்கத்தொகையாக மாணவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது.



தமிழகம் முழுவதும் உள்ள கிராமப்புற மாணவர்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த மாணவர்கள் ஏற்றம் பெறும் பொருட்டு, NMMS தேர்வுக்கு பயிற்சி தரும் நோக்கில் காணொலிகளைத் தயாரித்து **“Mani Mathboard”** Youtube Channel லில் பதிவேற்றம் செய்து வருகிறேன். இத்திறனறித் தேர்வில் மாணவர்கள் வெற்றி பெறத் தேவையான வகையில் 250 காணொலிகள் பதிவேற்றம் செய்துள்ளேன்.




**NMMS தொடர்பான காணொலிகள் குறித்த விபரம் பின்வருமாறு:**

MAT பயிற்சி வகுப்பு காணொலிகள் = 60

MAT மாதிரி வினாக்கள் காணொலிகள் = 50

SAT - Maths அலகு வாரியாக மாதிரி வினாக்கள் காணொலிகள் = 20

SAT - Science அலகு வாரியாக மாதிரி வினாக்கள் காணொலிகள் = 20

SAT - Social Science அலகு வாரியாக மாதிரி வினாக்கள் காணொலிகள் = 30

Previous year original question papers(MAT & SAT) solved videos(2018-24) =45

Full Revision test solved videos = 10

Mock test solved videos = 2

31.07.2024 அன்று பூசாரிபாளையம் ஊ.ஒ.ந.நி.பள்ளியை பார்வையிட, நாமக்கல் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் **மதிப்புமிகு முதல்வர் மு.செல்வம்** அவர்கள் வருகை புரிந்தார்கள். அந்த வேளையில் மதிய நேரத்தில் மாணவர்களுக்கு Digital board வாயிலாக NMMS பயிற்சி அளித்துக் கொண்டிருந்தேன். வகுப்பறைக்குள் வந்து மாணவர்களிடம் NMMS பயிற்சி குறித்து கேட்டார். பின் NMMS தேர்வு குறித்த விழிப்புணர்வு உரையாற்றினார். என்னால் தயாரிக்கப்பட்டுள்ள காணொலிகள் பற்றி கேட்டறிந்து பாராட்டினார்.






நாமக்கல் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மதிப்புமிகு. முதல்வர் அவர்களால் தொடங்கப்படவுள்ள "NMMS SUPER 25" திட்டத்தில் பங்கேற்று மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். இத்திட்டம் அவற்றி பெற நிச்சயம் எனது பங்களிப்பை தருவதாக உறுதியளித்தேன்.

நன்றி

திரு.ப.மணிகண்டன், M.Sc., B.Ed.,D.T.Ed.,
கணித பட்டதாரி ஆசிரியர்,
ஊ.ஒ.ந.நி.பள்ளி, பூசாரிபாளையம்,
இராசிபுரம் ஒன்றியம்,
நாமக்கல் மாவட்டம்.
அலைபேசி: 9486042043